**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | ) | |
| | | | ) | |
| Miscellaneous | .. | .. | ) | |
| | | | ) | **Sessions Case No. 89/2020** |
| Preliminary Register | .. | .. | ) | |
| | | | ) | |
| Sessions | .. | .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW6** |
| | { | |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | கருப்பசாமி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரிகள் ஆஜர்)

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the 19th day of November 2025.**

முதல் விசாரணை **:** நான் P.புதுப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான்**.** அந்த கையொப்பம் அ**.**த**.**சா**.**ஆ**.3.** சுமார் 4

வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காரியாபட்டி காவல்நிலையத்தில் வைத்து எங்கள் ஊர் தலைவர் கையொப்பம் போட சொன்னார். அவர் பக்கத்து வீட்டுக்காரர் என்பதனால் நான் கையொப்பம் செய்தேன்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டதன் பேரில் அதற்கு அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

கடந்த 25.05.2020 ம் தேதி இரவு சுமார் 19.15 மணிக்கு நானும், எங்கள் ஊரை சேர்ந்த ஜெய்கணேஷ் என்பவரும் எங்கள் தெருவில் பேசிக்கொண்டிருந்தோம் என்றும், அப்போது அங்கு வந்த காரியாபட்டி கவால்நிலைய அதிகாரிகள் எங்கள் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு டார்ச்லைட் மற்றும் தெருவிளக்கு வெளிச்சத்தில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அவர்கள் தயார் செய்த பார்வைமகஜரில் நான் சம்பவஇடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் இருவரும் ஊர்காரர்கள் என்பதானல் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் சொல்கின்றேன் என்றால் - சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

மறுவிசாரணை : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**